

# இசையும், அவற்றினால் ஏற்படும் பயன்களும்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள், பாரம்பரிய கிறிஸ்தவக் கீர்த்தனைகள் பல்லாண்டு காலமாகவே நமது திருச்சபை வாழ்விற்கும், கடவுளை அர்த்தத்தோடு வணங்குவதற்கும் பெரும் உதவியாக இருக்கின்றது. இக்கிறிஸ்தவ தமிழ்க்கீர்த்தனையை மீண்டும் உயிர்ப்பிக்க நமது ‘‘கீர்த்தனையின் மகிமை அறக்கட்டளை’’ முன்னின்று நடத்துவது குறித்து ரொம்ப மகிழ்ச்சியாய் இருக்கிறது.

இசை என்றாலே இனிமை என்று தான் பொருள். உலகத்தில் இன்பம் தருகின்ற அனைத்துமே இசையாகின்றன. கண்ணைக் கவர்ந்து, காதில் ஒலித்து சப்தஸ்வரங்களாகும் அனைத்துமே இசைதான். இசைக்கு மொழியில்லை, வடிவம் இல்லை, நிறம் இல்லை, மணம் இல்லை. இனிமை மட்டுமே விஞ்சி நிற்கின்றது.

குயில்பாடும் இசை சங்கீதம், கிளிபேசும் மொழி சங்கீதம், கடலின் அலையும் சங்கீதம், கவிஞர் மொழியும் சங்கீதம், தென்றல் காற்றும் சங்கீதம், தேவாரப்பாட்டும் சங்கீதம், சாரல் மலையும் சங்கீதம் சாளத ஓசையும் சங்கீதம், இமை மூடித்திறக்கும் அழகு சங்கீதம், இதயத்துடிப்பின் ஓசையும் சங்கீதம், நாணல் நடப்பதும் சங்கீதம், நறுமண மலர்கள் பேசுவதும் சங்கீதம், கார்க்கூந்தல் கலையும் அழகு சங்கீதம், கால் கொலுசு ஓசையும் சங்கீதம், வளை சிந்தும் ஓசை சங்கீதம், வளைந்து நெளியும் அருவியின் ஓசையும் சங்கீதம் - மூங்கில் குழல் பாடும் இசையும் சங்கீதம்.

முத்தமிழ் இனிமையும் சங்கீதம், மின்னல் ஒளியும் சங்கீதம், வெண்ணிலவு நடப்பதும் சங்கீதம், பறவைகள் பாடுவதும் சங்கீதம், பயிர்கள் ஆடுவதும் சங்கீதம். மனிதனை மட்டுமின்றி எல்லா உயிர்களையும் மயக்கும் சக்தி கொண்டது இசை.

மனதுக்கு இனிமை தருகின்ற அனைத்துமே இசையின் பாகங்களாகின்றன.

மரம், செடி, கொடி, ஆகிய உயிர்கள் மூன்றும் இசையைப் பாடுகின்றன.

விலங்குகளும், பறவைகளும் ஐந்திசையான பஞ்ச பூத இசைபாடுகின்றன. மனிதன் பகுத்தறிவு என்ற 6வது இசையை பாடுகின்றான். ஏழிசை என்பது மனிதனால் வரையறுக்கப்பட்ட கட்டிசையாகும். இந்த ஏழிசை தான் ஏழு ஸ்வரங்களாக இசைக்கின்றன.

**ஏழுஸ்வரங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ | - | ஸட்சஜமம் | = | மயில் அகவல் |
| ரி | - | ரிஷபம் | = | மாட்டின் சத்தம் |
| க | - | காந்தாரம் | = | ஆட்டின் கணைப்பு |
| ம | - | மத்தியமம் | = | கிரவுஞ்ச் பறவை சத்தம் |
| ப | - | பஞ்சமம் | = | குயில் கூவுதல் |
| த | - | தைவதம் | = | குதிரையின் கனைப்பு |
| நி | - | நிஷாதம் | = | யானையின் பிளிரல் |

மேற்கண்ட ஸ்வரங்கள், இந்த விலங்கினங்கள், பறவைகளின் சப்த பேதங்களிலிருந்து கண்டறிந்தனர். இசையில் நவரச தன்மை உடைய ராகங்களும் உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | வீரம் | = | நாட்டை |
| 2. | சாந்தம் | = | சாமா |
| 3. | கோபம் | = | அடானா |
| 4. | வியப்பு | = | பியாக்கடை |
| 5. | பயம் | = | புன்னாகவராளி |
| 6. | துயரம் | = | சுபபந்துவராளி |
| 7. | சந்தோஷம் | = | மோகனம் |
| 8. | காதல் | = | கானாடா |
| 9. | சோகம் | = | முகவரி |

இதைப் போலத்தான் நம்முடைய கிறிஸ்தவ இசை வல்லுநர்கள் அநேகர் பாடல்களை சூழ்நிலைகளுக்கு தகுந்தாற்போல இராகங்கள் அமைத்து, தாளம் போட்டு மெட்டுப் போட்டு, பாடி வைத்திருக்கிறார்கள். இந்த

பாடல்களையெல்லாம் நாமும் பாடி, பழகி வருங்கால சந்ததியினரை கீர்த்தனைகளினால் மகிழ செய்வோம்.

**சகோதரன். அசோக்குமார்**
இசை கலைஞன

காஞ்சிகோயில்
ஈரோடு மாவட்டம